# பத்மனாபபுரம் நகராட்சி

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் அவசர கூட்டம் 2018–ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 13–ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு.

## பொருள்கள்

1)இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண். 16, சர்.சி.பி.ராமசாமி அய்யர் நினைவு கட்டிடம் டவுண்ஹால் சேர்ந்து நகராட்சிக்கு சொந்தமான புல எண். பி8–180 கொண்ட இடத்தில் 4,250 சதுரஅடி உள்ள காலியிடத்தில் குத்தகை உரிமம் விடப்பட்டு குத்தகை உரிமம் பல ஆண்டுகள் முடிவடைந்து இதுநாள்வரை நகராட்சியால் உரிமம் புதுப்பித்து வழங்கப்படவில்லை. மேலும் மேற்படி இடத்தில் பல ஆண்டுகளாக மாத வாடகை எதுவும் செலுத்தவில்லை.

மேலும் மேற்படி இடமானது குறுகிய வளைவில் இருப்பதினாலும், அருகில் ஒருங்கிணைந்த நீதி மன்றவளாகம் செயல்படுவதாலும், பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் மிகவும் இடையூறாக இருந்து வரும் காரணத்தினாலும், பழைய பேருந்து நிலையத்தில் அதிகளவு பேருந்துகள் நிறுத்தி செல்வதினாலும், அதிகளவு பேருந்துகள் இவ்வழியாக செல்வதாலும் அடிக்கடி மேற்படி இடத்தில் போக்குவரத்து நெருக்கடி மற்றும் விபத்துகள் ஏற்படுகிறது. மேலும் 1985–ல் குத்தகை உரிமம் முடிவடைந்தது எவ்வித குத்தகை தொகையும் நாளது தேதி வரையிலும் செலுத்தப்படாமல் சட்ட விரோதமாக அமைந்துள்ளது. மேலும் மேற்படி கட்டிடம் உபயோகமற்ற நிலையில் உள்ளது.

எனவே விபத்தினை தடுத்திடும் பொருட்டும் போக்குவரத்து நெரிசல் ஏற்படாதவாறு செய்திடவும், பொது மக்கள் நலன் கருதி இந்நகராட்சிக்குச் சொந்தமான இடத்தை கையகபடுத்திடவும், மேற்படி சாலை ஓரத்தை நகராட்சி டவுண்ஹாலில் சேர்த்து பராமரிப்பு செய்திடவும், மேற்படி நபருக்கு குத்தகை உரிமம் புதுப்பித்தல் தொடர்பாக ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும் அவற்றை ரத்து செய்யவும் நகராட்சிக்கு ஏற்பட்ட இழப்புகளை அன்னாரிடமிருந்து வசூலிக்கவும் நடவடிக்கை எடுத்திட மன்றத்தின் அங்கீகாரத்திற்காக பொருள் வைக்கப்படுகிறது.

(ந.க.எண். ற்றி.பி.ஐ/6190/2000)

**மன்றத் தீர்மானம் எண். 1328**

அங்கீகரிக்கப்பட்டது.

ஒப்பம்/– (கே. சரவணகுமார்)
தனி அலுவலர் (ம)
ஆணையாளர் (கூ.பொ)
பத்மனாபபுரம் நகராட்சி.

//உண்மை நகல் //

மேலாளர்
பத்மனாபபுரம் நகராட்சி.

D:Typist/councilnew/coun2018aug-3